பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2025 THURSDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் குறித்த உச்சிமாநாடு இந்தியாவில் நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. வங்கிகள் திருத்தச் சட்டம் நாளை முதல் அமலுக்கு வருகிறது.

3. பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தர் மருத்துவமனையில் 3 நோயாளிகள் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, 3 மருத்துவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. பல்பிர் சிங் தெரிவித்துள்ளார்

4. தென்கொரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி 15 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

5. மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷ்யா சென், ஆயுஷ் ஷெட்டி, தருண் மனப்பள்ளி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

> > > > > < < < < <

பிரதமரின், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 20வது தவணைத் தொகையை விடுவிப்பதற்கான, ஆலோசனைக் கூட்டம், வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தலைமையில் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு இந்த திட்டத்தின் பலன் சென்றடையும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

நாளை மறுநாள் உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் நடைபெறும் விழாவில் 20வது தவணைத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுவிக்கவுள்ளதாகவும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் அதிகாரிகளை வலியுறுத்தினார்.

> > > > > < < < < <

2026ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான காலவரம்பு, ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பத்ம விபூஷன், பத்மபூஷன் மற்றும் பத்மஸ்ரீ விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த விருது பெறுபவர்களின் பட்டியல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> > > > > < < < < <

ரயில் விபத்துகளை தடுக்கும் விதத்தில், உள்நாட்டிலேயே புதிய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள Kavach 4.0 பாதுகாப்பு முறையை Kota – Madura இடையேயான வழித்தடத்தில் விரைவில் அறிமுகப்படுத்தவிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், Kavach 4.0 குறுகிய காலத்தில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இது, பிரதமரின் உள்நாட்டிலேயே தயாரிப்போம் திட்டத்தின் கீழ், இந்த பாதுகாப்பு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

> > > > > < < < < <

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் குறித்த உச்சிமாநாடு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியாவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் தொழில்நுட்ப பலன்கள் சென்றடைய வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எண்ணத்தை பூர்த்தி செய்யும் விதத்தில், இந்த மாநாடு நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மருத்துவம், கல்வி, காலநிலை மாற்றம், விவசாயம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் செயற்கை நுண்ணறிவுத் திறன்களை மேம்படுத்தும் வகையில், இந்த மாநாடு நடைபெறும் என்றும் அமைச்சர் கூறினார்.

> > > > > < < < < <

வங்கிகள் திருத்தச் சட்டம் நாளை முதல் அமலுக்கு வருகிறது.

வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் விதத்தில் இந்த சட்டம் அமைந்துள்ளது.

இதுதொடர்பாக முறையான அறிவிக்கை இந்த ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி வெளியிடப்பட்டதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த சட்டத்தின் கீழ், பொதுத்துறை வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் இயக்குநர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

> > > > > < < < < <

நாட்டிலேயே மூன்றாவது பெரிய மென்பொருள் ஏற்றுமதி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்தியாவின் மென்பொருள் தலைநகரமாக சென்னை விளங்குவதாக கூறினார்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம், தகவல் தொழில்நுட்பத்துறையின் பங்களிப்புடன் மாணவர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தை ஒரு புத்தாக்க தலைநகராகவும், அறிவுசார் சக்தி மையமாகவும் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

> > > > > < < < < <

பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தர் மருத்துவமனையில் 3 நோயாளிகள் உயிரிழந்ததை அடுத்து, 3 மருத்துவர்களை இடைநீக்கம் செய்தும், ஒரு மருத்துவரை நிரந்தர பணிநீக்கம் செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. பல்பிர் சிங் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் கண்காணிப்பாளர், மூத்த மருத்துவ அதிகாரி, மருத்துவர் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நோயாளிகள் உயிரிழந்தது தொடர்பாக பெறப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திரு. பல்பிர் சிங் கூறினார்.

> > > > > < < < < <

தென்கொரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி 15 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். தென்கொரியாவுடன் ஒரு முழுமையாக வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் படி, 350 பில்லியன் டாலர் அளவுக்கு, தென்கொரியா, அமெரிக்காவில் முதலீடு செய்யும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக. தென்கொரிய அதிபர் திரு. Lee Jae Myung மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி என்ற கெடுவுக்கு முன்பாக இந்த வர்த்தக ஒப்பந்தமானது, இருதரப்பினராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

> > > > > < < < < <

ரஷ்யா, ஜப்பான் மற்றும் ஹவாய் தீவு பகுதிகளில் அறிவிக்கப்பட்டிருந்த சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

பசிபிக் பெருங்கடலில் நேற்று எட்டு புள்ளி எட்டு ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக, ரஷ்யா – ஜப்பான் கடலோரப் பகுதிகளில் சுனாமி அலை வீசியது.

முன்னதாக, சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து பல லட்சக்கணக்கான மக்கள், பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

பொருட்சேதம். உயிர்ச்சேதம் குறித்த விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

> > > > > < < < < <

வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு கனடா ஆதரவு தெரிவிக்க முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. Mark Carney தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் அமைப்பினரை உட்படுத்தாமல், ஜனநாயக முறையில் அங்கு தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், இதன் அடிப்படையில் கனடா, பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள், பாலஸ்தீனத்தை தனிநாடாக அறிவிக்க ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுவரை, ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள 193 நாடுகளில், 150 நாடுகள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

> > > > > < < < < <

ஹிமாச்சலப்பிரதேசத்தில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் கிழக்குப் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பீகார், சத்திஷ்கர், ஜம்மு காஷ்மீர், லடாக். ஒடிசா. உத்ராகண்ட், மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களின் ஒரு சில இடங்களில் கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு. புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே காணப்படும் என்றும், இயல்பை விட 2 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்து காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

> > > > > < < < < <

மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷ்யா சென், ஆயுஷ் ஷெட்டி, தருண் மனப்பள்ளி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா மற்றும் தனிஷா கிராஸ்ட்டோ இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

> > > > > < < < < <

*இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று லண்டனில் தொடங்குகிறது.*

*இப்போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுகிறது.*

*ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து 2 போட்டிகளிலும். இந்தியா ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன.*

*>>>>><<<<<*

*இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயானா 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டிகள், வரும் செப்டம்பர் 21ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>end<<<<<